# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 7 /2018**

திரு. கொளஞ்சி,
த/பெ சின்னசாமி,
2/111, மேற்கு தெரு,
நெடுங்குளம் கிராமம், திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம். . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

1) செயற் பொறியாளர்/விருத்தாசலம்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 /11 கே.வி. விருத்தாசலம் துணை மின் நிலைய வளாகம்,
பூதமூர், விருத்தாசலம் – 606 001.

2) உதவி செயற் பொறியாளர்/திட்டக்குடி,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திட்டக்குடி துணை மின் நிலைய வளாகம்,
திட்டக்குடி – 606 106. . . . . . எதிர்மனுதாரர்கள்

**ஆணை நாள்: 18.5.2018**

1. திரு. கொளஞ்சி, த/பெ சின்னசாமி, நெடுங்குளம் கிராமம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம் அவர்களின் நாளிடப்படாத மனு மேல்முறையீட்டு மனு எண்.7/2018 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளரின் பக்கத்து வீட்டில் வசிக்கும் திரு. சேகர் என்பவரிடமிருந்து வீட்டு மின் இணைப்பு விண்ணப்பம் 15.3.2016 அன்று பெறப்பட்டு கள ஆய்வு செய்தபோது அவருடைய வீட்டிற்கு மிகவும் அருகில் தாழ்வழுத்த மின்பாதை சென்றதால் மின்இணைப்பு வழங்காமல் மின்பாதையை மாற்றியமைக்க அவரிடம் மின்வாரிய அதிகாரிகள் அறிவுறுத்தியதாகவும், அதன்படி DCW பங்கீட்டு வைப்புத்தொகை திட்டத்தின்கீழ் விண்ணப்பம் பெறப்பட்டு மின்பாதை மாற்றியமைக்கப்பட்டது. அதனால், மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு இடையூறு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டதால் ஆட்சேபனை தெரிவித்து மின்குறைதீர்ப்பாளர் முன்பாக மேல்முறையீடு செய்துள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 22.2.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. இதற்கிடையே எதிர் மனுதாரரான செயற்பொறியாளர்/இப/விருதாச்சலம், கடலூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தனது 10.5.2018 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளர் மனுவில் கூறியுள்ள மின்கம்பியை இடம்மாற்றம் செய்ய வேண்டி கோரியுள்ளபடி DCW பங்கீட்டு வைப்புத்தொகை திட்டத்தின்கீழ் விண்ணப்பம் பதிவு செய்து மனுதாரர்க்கு எவ்வித இடையூறும் இல்லாமல் மின்கம்பிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளர் தனது கோரிக்கை நிறைவேறிவிட்டதால் தனது மேல்முறையீட்டு மனு எண்.7/2018ஐ திரும்பப் பெற்றுக் கொள்வதாக தனது 4.5.2018 நாளிட்ட எழுத்துபூர்வமாக கொடுத்த அசல் கடிதத்தை மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பித்துள்ளார்.

5. மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய 04.05.2018 நாளிட்ட மின் குறைதீர்ப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தில் தன்னுடைய (மனு எண்.7/2018) மேல்முறையீட்டு மனுவை திரும்ப

பெற்றுக்கொள்வதாக கடிதம் அளித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ அய்யா*

*வணக்கம், எனது பக்கத்து வீட்டு சேகர், W/o கோகிலா இவர்கள் வீட்டுக்கு மின் இணைப்பு கொடுத்ததால் எங்கள் வீட்டு இடத்தில் **3** அடி ஆங்கில் இருந்ததால் இதனை நாங்கள் கடலூர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் நாங்கள் மனு அளித்திருந்தோம். அதற்கு எங்களை நேரில் வரச்சொல்லி மீட்டிங் வைத்தார்கள். நாங்கள் எங்கள் ஆதாரங்கள் அனைத்தையும் கொடுத்தோம். அதற்கு சரியான பதில் அளிக்கவில்லை. அதற்கு பிறகு மின்குறைதீர்ப்பாளர் அலுவலகத்திற்கு நாங்கள் மேல்முறையீடு அனுப்பி உள்ளோம். **17.05.2018** வரச்சொல்லி அழைப்பு விடுத்திருந்தார்கள். ஆனால், தற்போது உதவி மின்பொறியாளர், E. கீரனூர் மற்றும் உதவி செயற்பொறியாளர்/திட்டக்குடி அவர்கள் சேர்ந்து என்னுடைய இடத்தில் மின் கம்பிகளை அகலபடுத்தியிருந்ததை அதனை எடுத்துவிட்டார்கள். என்னுடைய பாதையில் மின் கம்பி இல்லை. எனவே, நான் தங்கள் இடம் மேல்முறையீடு (மேல்முறையீட்டு மனு எண். **7/2018**) யை திரும்ப பெற்றுக் கொள்கிறேன். இதன் பிறகு மின் நீட்டிப்பு செய்யாத வரைக்கும் எந்த ஒரு புகாரும் செய்யமாட்டேன் என்பதை இதன் மூலம் உறுதி அளிக்கிறேன்.*

*இப்படிக்கு*
*இடது கைபெருவிரல் ரேகை*
*(கொளஞ்சி) ”*

**6.** மேல்முறையீட்டாளர், தனது **4.5.2018** நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.7/2018 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன் )**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1) திரு. கொளஞ்சி,
த/பெ சின்னசாமி,
2/111, மேற்கு தெரு,
நெடுங்குளம் கிராமம், திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

2) செயற் பொறியாளர்/விருத்தாசலம்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 /11 கே.வி. விருத்தாசலம் துணை மின் நிலைய வளாகம்,
பூதமூர், விருத்தாசலம் – 606 001.

3) உதவி செயற் பொறியாளர்/திட்டக்குடி,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திட்டக்குடி துணை மின் நிலைய வளாகம்,
திட்டக்குடி – 606 106.

4) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேப்பர் மலை, கடலூர்–607 004.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.